OL/2024(2025)/87/T-I,II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

87 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2024(2025)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2024(2025)
General Certificate of Education (Ord. Level) Examination, 2024(2025)

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය I, II
தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் I, II
Communication and Media Studies I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் I

**அறிவுறுத்தல்கள் :**

- ✳ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ✳ 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
- ✳ **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**
- ✳ அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** ஆளிடைத் தொடர்பாடல் நிகழ்வொன்றுக்கான ஓர் உதாரணம்
(1) ஓவியங்கள் வரைதல் ஆகும்.
(2) தொலைபேசி உரையாடலில் ஈடுபடல் ஆகும்.
(3) விரிவுரையொன்றை நிகழ்த்துதல் ஆகும்.
(4) செய்தியறிக்கையை வாசித்தல் ஆகும்.

**2.** கற்றூண்களில் அரச தகவலொன்று பொறிக்கப்பட்டிருக்குமானால், அவை
(1) குகைப் பொறிப்புகள் எனப்படும்.
(2) தூண் பொறிப்புகள் எனப்படும்.
(3) பட்டயச் சுருள் எனப்படும்.
(4) கல்வெட்டுக்கள் எனப்படும்.

**3.** ஜோஹன்ஸ் குடென்பேர்க்கின் பங்களிப்பினால் அச்சிடப்பட்டவை எனக் கருதப்படும் நூல்கள்
(1) வஜ்ர சூத்திரம் மற்றும் இலத்தீன் விவிலியம்
(2) இலத்தீன் இலக்கணம் மற்றும் இலத்தீன் விவிலியம்
(3) டச்சுப் பிரார்த்தனை நூல் மற்றும் வஜ்ர சூத்திரம்
(4) இலத்தீன் விவிலியம் மற்றும் டச்சுப் பிரார்த்தனை நூல்

**4.** இலங்கையில் முதலாவது தொலைக்காட்சிச் சேவை தனியார் கம்பனியொன்றாக ஸ்தாபிக்கப்பட்டது. அது எது?
(1) தேசிய தொலைக்காட்சி (2) சிரச தொலைக்காட்சி
(3) சுயாதீனத் தொலைக்காட்சி (4) தெரண தொலைக்காட்சி

**5.** கண்டிக்குச் செல்வதற்காக கோட்டை ரயில் நிலையத்தை வேகமாக வந்தடைந்த ரவி மாகோ ரயிலைப் பிடித்தபோது இரைச்சலுக்கு மத்தியில் ரயில் அறிவிப்பினைச் செவிமடுத்தான். ரவியால் உணரப்பட்ட தொடர்பாடல் குறுக்கீடு எது?
(1) அறிகைக் குறிக்கீடு (2) மொழிசார் குறுக்கீடு
(3) சமூகக் குறுக்கீடு (4) ஊடகக் குறுக்கீடு

**6.** தகவல் என்பது
(1) சரியான தரவுகளின் ஒரு தொகுப்பாகும்.
(2) பண்புத்தரமிக்க தரவுகளின் ஒரு தொகுப்பாகும்.
(3) ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட தரவுகளின் தொகுப்பாகும்.
(4) பயனுறுதியான தரவுகளின் ஒரு தொகுப்பாகும்.

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations - Sri Lanka

Department of Examinations Sri Lanka

7. இலங்கையில் வெளியிடப்பட்ட முதலாவது ஆங்கில, தமிழ், சிங்களச் செய்திப்பத்திரிகைகள் முறையே யாவை?
   (1) கொழும்பு ஜேர்னல், உதயதாரகை மற்றும் லங்கா லோகய
   (2) கொழும்பு ஜேர்னல், உதயதாரகை மற்றும் லக்மினி பஹன
   (3) த நேஷன், தினகரன் மற்றும் லக்மினி பஹன
   (4) டெய்லி நியூஸ், உதயதாரகை மற்றும் லங்கா லோகய

8. செய்திப்பத்திரிகைகளில் செய்தி அறிக்கையிடல் நுட்பங்களில், உயர் பெறுமானம் எடுத்துக் காட்டப்படுவது
   (1) புகைப்படத்தினால் ஆகும். (2) பத்தியெழுத்தினால் ஆகும்.
   (3) சித்திரிப்புக் கட்டுரையினால் ஆகும். (4) தலைகீழ் பிரமிட் முறையினால் ஆகும்.

9. வெகுசன ஊடகங்களுடன் தொடர்புடைய வாயிற்காப்பு இடம்பெறுவது
   (1) பல்வேறு நிலைகளில் ஆகும். (2) உள்ளக மட்டத்தில் மாத்திரம் ஆகும்.
   (3) குறிப்பிட்ட சபையொன்றினால் ஆகும். (4) வெளியக மட்டத்தில் மாத்திரம் ஆகும்.

10. பின்வருவனவற்றுள் ஆளிடைத் தொடர்பாடலுக்குப் பயன்படுத்தப்பட <u>முடியாதது</u> எது?
   (1) குறுஞ்செய்திச் சேவை (2) தொலைபேசி உரையாடல்
   (3) செய்திப்பத்திரிகை (4) வணிகக் கடிதம்

11. வானொலியின் மிகப்பழமையான நிகழ்ச்சி வடிவம்
   (1) கதை நிகழ்ச்சி ஆகும். (2) கலந்துரையாடல் ஆகும்.
   (3) உரையாடல் ஆகும். (4) நேர்காணல் ஆகும்.

12. பஸ் ஒன்றில் பயணித்த தாமரை அந்த பஸ்ஸில் ஒலித்த இரைச்சல்மிக்க இசையினால் பெரிதும் அசௌகரியத்திற்குள்ளாகி எப்போது இறங்குவோம் எனச் சிந்தித்தாள். இந்த எடுத்துக்காட்டு தொடர்புபடும் தொடர்பாடல் வகை எது?
   (1) ஆளிடைத் தொடர்பாடல் (2) வெகுசனத் தொடர்பாடல்
   (3) ஆளுள் தொடர்பாடல் (4) குழுத் தொடர்பாடல்

13. முக்கியமான இரண்டு செய்தி வகைகள் எவை?
   (1) வன் செய்திகள் மற்றும் மென் செய்திகள்
   (2) உள்ளூர்ச் செய்திகள் மற்றும் வெளிநாட்டுச் செய்திகள்
   (3) தேசிய செய்திகள் மற்றும் பிராந்தியச் செய்திகள்
   (4) அபிவிருத்திச் செய்திகள் மற்றும் வணிகச் செய்திகள்

14. செய்திப்பத்திரிகைகளை வகைப்படுத்தும்போது கவனிக்கப்படக்கூடுமான பண்புகளாவன
   (1) செய்திப் பத்திரிகையின் அளவு, வெளிவரும் காலம் மற்றும் பொருளாதார அம்சங்கள்
   (2) பயன்படுத்தும் வாசகர்கள், பொருளாதார அம்சங்கள் மற்றும் கவனங்குவிக்கப்படும் விடயதானம்
   (3) பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம், வெளிவரும் காலம் மற்றும் கவனங்குவிக்கப்படும் விடயதானம்
   (4) வெளிவரும் காலம், கவனங்குவிக்கப்படும் விடயதானம் மற்றும் பயன்படுத்தும் வாசகர்கள்

15. ஆளிடைத் தொடர்பாடலின் பயனுறுதித்தன்மையை அதிகரிப்பதற்காகப் பயன்படக்கூடுமான, அதிகம் வினைத்திறன்மிக்க இரண்டு தொடர்பாடல் வடிவங்களைக் கொண்டிருக்கும் தெரிவு எது?
   (1) வாய்மொழி மற்றும் செவிப்புலத் தொடர்பாடல்கள்
   (2) வாய்மொழி அல்லாத மற்றும் கட்புலத் தொடர்பாடல்கள்
   (3) வாய்மொழி மற்றும் வாய்மொழி அல்லாத தொடர்பாடல்கள்
   (4) செவிப்புல மற்றும் கட்புலத் தொடர்பாடல்கள்

16. தொடர்பாடலைப் படைப்பாக்கமாக உருவாக்குவதற்குக் கட்புல வெளிப்பாட்டு முறைகள் பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்றன. அத்தகைய கட்புல வெளிப்பாட்டு முறைகளைக் கொண்டிருக்கும் சரியான தெரிவினைத் தேர்வுசெய்க.
   (1) எழுத்துக்கள், சைகைகள், குறியீடுகள், சித்திரங்கள்
   (2) புகைப்படங்கள், ஒலிகள், வரைபடங்கள், குறியீடுகள்
   (3) சைகைகள், செய்யுள்கள், சித்திரங்கள், சமிக்ஞைகள்
   (4) வரைபடங்கள், செய்யுள்கள், சித்திரங்கள், புகைப்படங்கள்

[பக். 3 ஐப் பார்க்க

17. வெகுசன ஊடகம் ஒரு தொழிற்துறையாகும். அதன் பிரதான இலக்கு
    (1) பெறுநர்களின் தேவைகளை இயலுமானவரை நிறைவேற்றுதல் ஆகும்.
    (2) அதிக ஆதாயங்களைச் சம்பாதித்துக்கொள்ளும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ஆகும்.
    (3) தொழில்நுட்பக் கருவிகளை உயர்தரத்துடன் பயன்படுத்துதல் ஆகும்.
    (4) சந்தைப் போட்டியை எதிர்கொள்ளும் வகையில் தயாராகிக்கொள்ளல் ஆகும்.

18. ஒருவரை மையமாக வைத்து பலருக்கும் பரவிச் செல்லும் செய்திகளைக் கொண்ட முறைசார் தொடர்பாடல் மாதிரி அறியப்படுவது
    (1) Y மாதிரி என ஆகும். (2) சங்கிலி மாதிரி என ஆகும்.
    (3) சக்கர மாதிரி என ஆகும். (4) வட்டவடிவ மாதிரி என ஆகும்.

19. தொடர்பாடல் பற்றிய ஹரோல்ட் டீ லாஸ்வெல்லின் வரைவிலக்கணத்தின்படி, தொடர்பாடல் செயன்முறையின் இறுதி இலக்கு
    (1) உகந்தவகையில் ஊடகங்களைப் பயன்படுத்துதல் ஆகும்.
    (2) எதிர்பார்க்கப்படும் மாற்றத்தைக் கொண்டுவருதல் ஆகும்.
    (3) தொடர்பாடுநரது வகிபங்கினை முழுமையாக்குதல் ஆகும்.
    (4) பெறுநரின் அனுபவக்களத்திற்கு ஏற்றவகையில் செய்தியொன்றை முன்வைத்தல் ஆகும்.

20. ஊடகங்களின் வேறுபட்ட வகைகளை ஒருசேர இணைப்பது காணக்கூடுமானதாக இருப்பது
    (1) இணைவு அல்லது குவிகையில் ஆகும். (2) வெகுசனத் தொடர்பாடலில் ஆகும்.
    (3) எண்ணிமமயமாக்கத்தில் ஆகும். (4) முறைசாரா தொடர்பாடலில் ஆகும்.

21. புகைப்படமொன்றை எடுத்தலின்போதான மூன்று முக்கிய படிநிலைகளை வரிசைக்கிரமத்தில் கொண்டிருக்கும் தெரிவு
    (1) அளவீடு, குவியப்படுத்துதல், திறத்தல்
    (2) திறத்தல், அளவீடு, குவியப்படுத்துதல்
    (3) குவியப்படுத்துதல், திறத்தல், அளவீடு
    (4) குவியப்படுத்துதல், அளவீடு, திறத்தல்

22. பின்வரும் கூற்றுகளில் கவனத்தைச் செலுத்துக.
    A - அக்டா டியுர்னா (Acta Diurna) ஆரம்பகால பிரிட்டிஷ் செய்திப்பத்திரிகை ஆகும்.
    B - லக்மினி பஹன இலங்கையின் முதலாவது சிங்களச் செய்திப்பத்திரிகை ஆகும்.
    C - மாசிக தெக்க சஞ்சிகை கிறிஸ்தவப் பாரம்பரியத்தில் உருவானது ஆகும்.
    மேற்படி கூற்றுகளில்
    (1) A மாத்திரம் சரியானது. (2) B மாத்திரம் சரியானது.
    (3) C மாத்திரம் சரியானது. (4) B மற்றும் C மாத்திரம் சரியானவை.

23. சுயாதீன ஊடகவியலாளர் என அறியப்படுவர்
    (1) தனக்கெனச் சொந்தமான ஊடக நிறுவனத்தை இயக்கும் ஒரு நபர் ஆவார்.
    (2) வெவ்வேறு நிறுவனங்களுக்கும் தகவலை வழங்கும் ஊடகவியலாளர் ஒருவராவார்.
    (3) நிறுவனமொன்றில் அதிகளவில் சுதந்திரத்தைப் பயன்படுத்தும் ஊடகவியலாளர் ஒருவராவார்.
    (4) நிறுவனமொன்றுடன் இணைக்கப்பட்டு, தகவல் அறிக்கையிடலில் ஈடுபடும் ஊடகவியலாளர் ஒருவராவார்.

24. இந்தப் படம் பிரதிபலித்து நிற்பது
    (1) ஊடாடுப் பலகையினை ஆகும்.
    (2) வெண் பலகையினை ஆகும்.
    (3) பக்கம் புரட்டியினை ஆகும்.
    (4) காந்தப் பலகையினை ஆகும்.



25. புலமைச் சொத்துச் சட்டத்தின்படி, படைப்பொன்றைப் படைப்பாளி விற்பதற்கு, குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விடுவதற்குரிய உரிமை
    (1) ஓர் ஒழுக்க உரிமை ஆகும். (2) ஒரு படைப்புரிமை ஆகும்.
    (3) ஒரு பொருளாதார உரிமை ஆகும். (4) ஒரு தொழில்வாண்மை உரிமை ஆகும்.

[பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

Department of Examinations Sri Lanka

26. ஒரு நிலைத்த புகைப்படம் என்பது
   (1) காட்சியொன்றைப் படம்பிடித்தல் (filming) ஆகும்.
   (2) காட்சியொன்றைப் பதிவு செய்தல் (capturing) ஆகும்.
   (3) காட்சியொன்றை மீளுருவாக்குதல் (recreating) ஆகும்
   (4) காட்சியொன்றின் கணமொன்றைப் (moment) பதிவு செய்தல் (capturing) ஆகும்.

27. சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
   (1) செய்தியைச் சரியாகச் செவிமடுக்க முடியாத இயலாமை ஒரு மொழிசார் குறுக்கீடு ஆகும்.
   (2) செய்தியொன்றின் உட்பொருளை (உப பனுவலை) வாசிக்கமுடியாத இயலாமை ஓர் ஊடகக் குறுக்கீடு ஆகும்.
   (3) செய்தியொன்றில் உள்ளடக்கப்பட்டுள்ள மொழிசார் குறுக்கீடுகள், ஊடகக் குறுக்கீடுகளை விடவும் வலுவானவை ஆகும்.
   (4) செய்தியொன்றில் பயன்படுத்தப்பட்டுள்ள குறியீடுகளைப் புரிந்துகொள்ள முடியாத இயலாமை மொழிசார் மற்றும் ஊடகக் குறுக்கீடுகளுக்குக் காரணமாகின்றது.

28. அனுபவக்களம் தொடர்பான சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
   (1) காலத்திற்குக் காலம் அனுபவக்களம் மாற்றமடைகிறது.
   (2) செய்தி ஊடுகடத்தலில் அனுபவக்களம் முக்கியமானது.
   (3) வெகுசன ஊடகப் பெறுநர்கள் ஒரேமாதிரியான அனுபவக்களங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி இருப்பர்.
   (4) ஆளுள் தொடர்பாடலில், அனுபவக்களத்திற்கு அதிக கவனம் செலுத்தப்படுகின்றது.

29. "ஊடக நிறுவனமொன்றின் செலவீனங்கள் பெறுநரிடமிருந்து மாத்திரம் பெற்றுக்கொள்ளப்பட முடியாதவை." இந்தக் கூற்று குறித்துநிற்பது.
   (1) வருமானம் விளம்பரத்திலிருந்தே கட்டணம் பெறப்படவேண்டும்.
   (2) பெறுநரிடமிருந்து ஊடகங்களுக்காகப் பெறப்படும் கட்டணம் அதிகரிக்கப்படவேண்டியது அவசியமாகும்.
   (3) தமது பெறுநர்களின் எண்ணிக்கையை விரிவாக்குவதற்கு ஊடக நிறுவனங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.
   (4) பராமரிப்பு மற்றும் தொழில்நுட்பக் கருவிகள் போன்ற மூலதனச் செலவீனங்கள் குறைக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

30. புரோட் சீட் (Broadsheet) செய்திப்பத்திரிகைகள் பற்றிய மிகச்சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
   (1) அவை வன்செய்திகளையே அதிகம் கொண்டிருக்கும்.
   (2) அதிக எண்ணிக்கையிலான மென்செய்திகள் இச்செய்திப்பத்திரிகைகளில் காணக்கிடைப்பனவாகும்.
   (3) பெரும்பாலான தேசியமட்டச் செய்திப் பத்திரிகைகள் இந்த அளவினதாகும்.
   (4) வரையறுத்த எண்ணிக்கையான மக்களை இச்செய்திப்பத்திரிகை வடிவம் இலக்குக்கொள்கின்றது.

31. பின்வரும் எடுத்துக்காட்டுகளைக் கவனத்திற் கொள்க.
   A - நேர்காணல்
   B - யாப்புக் கட்டமைப்பற்ற கவிதைகள் / புதுக் கவிதைகள்
   C - மாநாடுகள்
   மேற்படி எடுத்துக்காட்டுக்களுடன் தொடர்புடைய தொடர்பாடல் வகைகள் வரிசைக்கிரமமாக அமைவது
   (1) ஆளுள், ஆளிடை மற்றும் குழு. (2) ஆளிடை, ஆளுள் மற்றும் குழு.
   (3) குழு, ஆளுள் மற்றும் ஆளிடை. (4) ஆளிடை, குழு மற்றும் ஆளுள்.

32. மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் எந்த வெகுசன ஊடகப் பிரதிநிதித்துவக் கற்கையுடன் தொடர்புபட்டுள்ளன?
   (1) சமூகப் பிரதிநிதித்துவக் கற்கை (2) பொருளாதாரப் பிரதிநிதித்துவக் கற்கை
   (3) அழகியல் பிரதிநிதித்துவக் கற்கை (4) சமய மற்றும் ஒழுக்கம்சார் பிரதிநிதித்துவக் கற்கை

33. முறைசார் தொடர்பாடலுடன் **தொடர்புபடாத** தெரிவினைத் தேர்வுசெய்க.
   (1) தொடர்பாடல் மேலிருந்து கீழாகவும், கீழிருந்து மேலாகவும் நடைபெறுகின்றது.
   (2) நிறுவனமொன்றில் இணையாகப் பணியாற்றும் ஊழியர்களிடையே தகவல் பரிமாற்றப்படுகின்றது.
   (3) தனிச்சங்கிலி, சங்கிலி மாதிரி மற்றும் கொத்தணிச் சங்கிலி வழியாகத் தொடர்பாடல் இடம்பெறுகின்றது.
   (4) நிறுவனத் தலைவரின் அதிகாரத்தின் கீழ் முறைசார் தொடர்பாடல் இடம்பெறுகின்றது.

[பக். 5 ஐப் பார்க்க

**34.** ஒளித்தாக்கத்துக்குள்ளான படச்சுருளொன்றிலிருந்து இரசாயனச் செய்முறையொன்றின் ஊடாகப் புகைப்படமொன்றை உருவாக்குவதானது அறியப்படுவது
(1) அளவீடு (aiming) என்பதாக ஆகும். (2) செய்முறை (processing) என்பதாக ஆகும்.
(3) பிரிதிறன் (resolution) என்பதாக ஆகும். (4) எண்ணிமமயமாக்கம் (digitalization) என்பதாக ஆகும்.

**35.** சிங்கராஜா வனம் பற்றிய தொலைக்காட்சி ஊடகப் படைப்பாக்கமொன்றிற்கு மிகப் பொருத்தமான நிகழ்ச்சி வகைகள்
(1) ஓரங்கத் தொலைக்காட்சி நாடகம், சஞ்சிகை நிகழ்ச்சி மற்றும் செய்தி.
(2) நேரலை ஒளிபரப்பு நிகழ்ச்சி, விவரண நிகழ்ச்சி மற்றும் செய்தி.
(3) சஞ்சிகை நிகழ்ச்சி, விவரண நிகழ்ச்சி மற்றும் செய்தி.
(4) சஞ்சிகை நிகழ்ச்சி, நேரலை ஒளிபரப்பு நிகழ்ச்சி மற்றும் விவரண நிகழ்ச்சி.

**36.** இணையத்தில் மாத்திரம் வெளியிடப்படும் தொடரிணைச் செய்திப்பத்திரிகையொன்று (online newspaper) இலத்திரனியல் செய்திப்பத்திரிகையொன்றுடன் (e-newspaper) வேறுபட்டிருப்பது
(1) உலகின் எப்பகுதியிலிருந்தும் வாசிக்கப்பட முடியுமாக இருப்பதனால் ஆகும்.
(2) நாளின் எவ்வேளையிலும் அணுகப்பட முடியுமாக இருப்பதனால் ஆகும்.
(3) அதற்கு, வெளியீட்டுக்கான உயர் செலவான்று தேவைப்படாமல் இருப்பதனால் ஆகும்.
(4) அடிக்கடி இற்றைப்படுத்தப்பட முடியுமாக இருப்பதனால் ஆகும்.

**37.** ஊடக நிறுவனங்களின் நிலைபேற்றினைத் தீர்மானிக்கும் முக்கியமான இரண்டு அம்சங்களாவன
(1) பெறுநர் மற்றும் வணிக அனுசரணை ஆகும்.
(2) பெறுநர் மற்றும் நிகழ்ச்சிகள் ஆகும்.
(3) வணிக அனுசரணை மற்றும் உரிமையாண்மை ஆகும்.
(4) வணிக அனுசரணை மற்றும் நிகழ்ச்சிகள் ஆகும்.

**38.** தொலைக்காட்சி ஒரு ஸ்திரமற்ற ஊடகமாக அறியப்படுவது,
(1) அதன் நிகழ்ச்சி வகைகள் அடிக்கடி மாற்றமடைவதனால் ஆகும்.
(2) அந்த ஊடகம் நகர்திறன் (mobility) இல்லாமலிருப்பதனால் ஆகும்.
(3) செய்திப்பத்திரிகை ஒன்றில் இருப்பது போன்று தகவல்களின் தொகுப்பில் வரையறுக்கப்பட்டிருக்காமையினால் ஆகும்.
(4) செய்திகளை ஒருமுறை கிரகித்துக்கொள்ள முடியாவிட்டால் அவை கடந்து சென்றுவிடும் என்பதனால் ஆகும்.

**39.** வானொலிச் சஞ்சிகை நிகழ்ச்சி என்பது
(1) நிகழ்வொன்றின் சம்பவம் பற்றிய உண்மையான தொடர்புகளையும் கதைகளையும் கொண்டு தயாரிக்கப்படும் நிகழ்ச்சி ஆகும்.
(2) ஒரு விடயம் அல்லது விடயதானம் பற்றி வெவ்வேறு பார்வைகளை முன்வைத்துத் தயாரிக்கப்படும் நிகழ்ச்சி ஆகும்.
(3) உண்மையான நிகழ்வுகள் மற்றும் மக்கள் பற்றிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படும் நிகழ்ச்சி ஆகும்.
(4) குறுஞ் சித்திரிப்புக்கள், செய்தித் தகவல்கள் மற்றும் நேர்காணல்கள் போன்று வெவ்வேறு வடிவங்களுடனான அம்சங்களை உள்ளடக்கிய நிகழ்ச்சி ஆகும்.

**40.** செவிப்புலத் தொடர்பாடல் பற்றிய சில கருத்துக்கள் கீழே தரப்படுகின்றன.
A - அது ஒலியை அடிப்படையாகக் கொண்டு இடம்பெறுவது ஆகும்.
B - மனித ஒலிகள், விலங்குகளின் ஒலிகள் மற்றும் செயற்கையான ஒலிகளை அது உள்ளடக்கிருப்பது ஆகும்.
C - நவீன ஒலி வகைப்பாடுகளை மாத்திரம் அது உள்ளடக்கியிருப்பது ஆகும்.
D - செவிப்புலத் தொடர்பாடலில் மௌனம் ஓர் அம்சமாகும்.

மேற்படி கருத்துக்களில்,
(1) A, B மற்றும் C உண்மையானவை.
(2) A, B மற்றும் D உண்மையானவை.
(3) B, C மற்றும் D உண்மையானவை.
(4) A, B, C மற்றும் D அனைத்தும் உண்மையானவை.

* *



Department of Examinations Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**87 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2024(2025)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2024(2025)
General Certificate of Education (Ord. Level) Examination, 2024(2025)

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය I, II
தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் I, II
Communication and Media Studies I, II

## தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் II

* **முதலாம்** வினாவையும் வேறு எவையேனும் **நான்கு** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* **முதலாம்** வினாவுக்கு **20** புள்ளிகளும் ஏனைய எல்லா வினாக்களுக்கும் **10** புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**1.** தகவல்களைப் பரிமாறிக்கொள்ளுதல் தொடர்பாடல் செயன்முறையின் அடிப்படைச் செயற்பாடாகும்.

(i) மனிதர்களுக்குத் தகவல்கள் முக்கியமாகும் **இரண்டு** சந்தர்ப்பங்களைப் பெயரிடுக.

(ii) தகவல்களால் நிறைவுசெய்து கொள்ளப்படும் சமூகத் தேவைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(iii) இலங்கையில் பழைமையான காலப்பகுதியில் தகவல்களை வழங்கப் பயன்படுத்தப்பட்ட **இரண்டு** முறைகளை எழுதுக.

(iv) தகவல்களைச் சேகரிப்பவரிடத்தில் அவசியம் இருக்கவேண்டிய **இரண்டு** பண்புகளைப் பெயரிடுக.

(v) தொடர்பாடலின் பிரதான வகைகள் **இரண்டை** எழுதுக.

(vi) தகவல்களை எடுத்துச் செல்வதற்கான கருவியான வானொலியைக் கண்டுபிடித்தவர் யார்?

(vii) ஷெனொன் - வீவரின் தொடர்பாடலுக்கான வரைவிலக்கணத்தை எழுதுக.

(viii) முறைசார் தொடர்பாடலில் காணக்கிடைக்கக்கூடிய தொடர்பாடல் மாதிரிகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(ix) நவீன தகவல் தொடர்பாடலில் முக்கியமானதாக அமையும் கணினி வெளியீட்டுச் செயற்பாட்டின் **இரண்டு** ஆதாயங்களை சுருக்கமாக முன்வைக்குக.

(x) படைப்பாக்கத் தொடர்பாடலில் பயன்படும் திரைப்பட ஊடகத்துடன் தொடர்புடைய 'பார்வையின் தொடரறாத்தன்மை' என்பதன் பொருள் என்ன?

**2.** பாடசாலையின் விருது வழங்கும் விழாவில் அறிவிப்புக்களை மேற்கொள்ள ரவியினதும் கமலாவினதும் பெயர்கள் முன்மொழியப்பட்டிருந்தன.

(i) இவ்விழாவிற்கு முன்னர், ரவியும் கமலாவும் விழா பற்றி வாய்மொழித் தொடர்பாடலில் ஈடுபட்டிருந்தனர். வாய்மொழித் தொடர்பாடல் என்பதால் உணர்த்தப்படுவது என்ன?

(ii) வாய்மொழித் தொடர்பாடலின் வினைத்திறனுக்கு அவசியம் கவனஞ்செலுத்தப்படவேண்டிய மொழியுடன் தொடர்புடைய **இரண்டு** அம்சங்களைச் சுருக்கமாக விபரிக்குக.

(iii) மேற்படி விழாவுடன் தொடர்புடையதாக, குழுத்தொடர்பாடலின் **மூன்று** விசேட பண்புகளை விபரிக்குக.

(iv) இந்த விழாவானது பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சியாக வானொலியில் ஒலிபரப்பப்பட்டது. வானொலி ஊடகத்தின் **நான்கு** பண்புகளை விபரிக்குக.

**3.** வெவ்வேறு ஊடகங்கள் வழியாக மேற்கொள்ளப்படும் தகவல் பரவுகைச் செயற்பாடு சிக்கற்தன்மையானது.

(i) தகவல் அறிக்கையிடலுக்குப் பொதுவாகப் பயன்படுத்தப்படும் முறைகள் **இரண்டையும்** பெயரிடுக.

(ii) செய்திப்பத்திரிகை அறிக்கையிடலில் 'எழுத்துக்கள்' (text) மற்றும் 'படங்கள்' (image) தொடர்புடைய **இரண்டு** ஆக்கக்கூறுகள் வீதம் தனித்தனியாகக் குறிப்பிடுக.

[பக். 7 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

(iii) வானொலிக்கான பிரதி எழுதுவதில் கவனஞ்செலுத்தப்பட வேண்டிய பின்வரும் அம்சங்களின் விசேட பண்புகளைத் தனித்தனியாக விளக்குக.

(அ) மொழியின் தன்மை

(ஆ) முன்வைப்பின் / தொடர்பாடலின் தன்மை

(இ) செவிமடுக்கும் தன்மை

(iv) ஊடகங்களால் முன்வைக்கப்படும் தகவல்களால் சமூகத்தில் ஏற்படும் பின்வரும் **நான்கு** பாதிப்புக்கள் பற்றிக் கருத்துக்களைத் தெரிவிக்குக.

(அ) பாரம்பரிய மொழியில் ஏற்படும் மாற்றம்

(ஆ) இரசனைக் குறைவிற்கு ஆளாகுதல்

(இ) வன்முறைச் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெறுதல்

(ஈ) பயன்தராத பழக்கவழக்கங்களுக்கு ஆளாகுதல்

**4.** புதிய ஊடகத்தினதும் சமூக ஊடகங்களினதும் விரிவாக்கமானது, நாடொன்றின் வெகுசன ஊடகப் பயன்பாட்டில் படைப்பாக்கத் தாக்கமொன்றை ஏற்படுத்தியுள்ளது.

(i) எந்தப் பண்பு புதிய ஊடகத்தை பிரதான வெகுசன ஊடகத்திலிருந்து வேறுபடுத்தியிருக்கிறது?

(ii) பெறுநர் வகைப்படுத்தலிலிருந்து முக்கிய பெறுநர் வகைகள் **இரண்டையும்** பெயரிடுக.

(iii) கல்விச் செயன்முறைக்கு இணையம் முக்கியமாகும் வழியை, **மூன்று** அம்சங்களைப் பயன்படுத்தி விளக்குக.

(iv) சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும்போது அவசியம் பின்பற்ற வேண்டிய **இரண்டு** ஒழுக்கநெறிகளை விபரிக்குக.

**5.** செய்திகளைப் படைப்பாக்கத்தன்மையுடன் தயாரிப்பது பெறுநர்களைக் கவரும் காரணமாகின்றது.

(i) படைப்பாக்கமொன்றின் **இரண்டு** பண்புகளை எழுதுக.

(ii) செய்திப்பத்திரிகை ஊடகத்தில் நிலைத்த புகைப்படங்களைப் பயன்படுத்துவதன் **இரண்டு** அனுகூலங்களைச் சுருக்கமாக விபரிக்குக.

(iii) வானொலி ஊடகத்தில் படைப்பாக்கத்துடன் முன்வைக்கப்படக்கூடிய **மூன்று** நிகழ்ச்சி வடிவங்களைச் சுருக்கமாக விபரிக்குக.

(iv) படைப்பாக்கத் தொடர்பாடலில் பயன்படுத்தப்படும் பின்வரும் வெளியீட்டு விதிகளை உதாரணங்களுடன் விபரிக்குக.

(அ) மொழிசார் வெளியீட்டு விதிகள்

(ஆ) செவிப்புல வெளியீட்டு விதிகள்

(இ) கட்புல வெளியீட்டு விதிகள்

(ஈ) செவிப்புல - கட்புல வெளியீட்டு விதிகள்

**6.** ராஜினியின் வணிக நிறுவனத்திற்காகப் புதிய அலுவலகக் கட்டடத்தொகுதியொன்றை அமைப்பதாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்குத் தேவையான வெவ்வேறு உபகரணங்கள் பற்றி முகாமையாளர்கள் மத்தியில் கலந்துரையாடலொன்றும் நடைபெற்றது.

(i) அலுவலகத்திற்குத் தேவையான தொலைபேசிகளின் **இரண்டு** முக்கிய வகைகளையும் பெயரிடுக.

(ii) அலுவலகமொன்றை அடிப்படையாகக் கொண்ட ஊடகச் செயன்முறையின் செயற்பாடுகள் **நான்கினையும்** பெயரிடுக.

(iii) வணிக நிறுவனத்திற்கான இணையத்தளமொன்றைப் பராமரிப்பதன் **மூன்று** ஆதாயங்களைச் சுருக்கமாக விபரிக்குக.

(iv) நிறுவனமொன்றில் குறுந்தூரத் தொலைக்காட்சிச் சுற்றுக்கான (CCTV) கமெராக்களைப் பொருத்துவதன் முக்கியத்துவத்தை **இரண்டு** உதாரணங்களுடன் விளக்குக.

[பக். 8 ஐப் பார்க்க

Department of Examinations - Sri Lanka
Department of Examinations Sri Lanka

7. நாடொன்றின் பிரதான வெகுசன ஊடகங்கள் சமூகத்தில் பாரிய பாதிப்பினை உருவாக்குகின்றன.

(i) அரசாங்கத்தின் கீழ் அமைக்கப்பட்ட தொலைக்காட்சி நிறுவனமொன்றைப் பெயரிடுக.

(ii) செய்திப்பத்திரிகையொன்றின் செய்திப் பிரிவில் பணியாற்றும் ஆசிரியர்கள் **இருவரின்** உத்தியோகபூர்வப் பதவிநிலைகளைக் குறிப்பிடுக.

(iii) வெகுசன ஊடகக் களத்துடன் தொடர்புடைய பின்வரும் கருத்தாக்கங்களை விபரிக்குக.

(அ) ஊடக உரிமையாளர்

(ஆ) ஊடகவியலாளர்

(இ) பெறுநர்

(iv) வெகுசன ஊடகக் களத்தில் அரசாங்கம் மேற்கொள்ளும் நேரடித் தலையீடு **ஒன்றினையும்** மறைமுகத் தலையீடு **ஒன்றினையும்** விளக்குக.

* * *

Department of Examinations Sri Lanka